
**ஆகஸ்ட் – 25**

# TNPSC துளிகள்

- ❖ கஜகஸ்தானின் ஷிம்கென்ட்டில் நடைபெற்ற 16வது ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக் குழல் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியத் துப்பாக்கி சுடும் வீராங்கனை இளவேனில் வாளறிவன் தங்கம் வென்றார்.
- ❖ இராஜீவ் ரஞ்சனுக்குப் பதிலாக, நிதியியல் கொள்கைக் குழுவின் (MPC) அதிகாரப்பூர்வ உறுப்பினராக இந்திரனில் பட்டாச்சார்யாவை இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகரித்தது.
  - இந்திரனில் 2025 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் தேதியன்று நிதியியல் கொள்கைத் துறையின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 387வது சென்னை தினம் 2025




- ❖ 1639 ஆம் ஆண்டு இந்த நாளில் மதராஸ் (தற்போது சென்னை) நிறுவப்பட்டதைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று சென்னை தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ 1639 ஆம் ஆண்டில், கிழக்கிந்திய நிறுவனம் (EIC) மதராசப் பட்டணம் என்ற மீன்பிடிக் கிராமத்தை கையகப்படுத்தி, நகரத்தின் காலனித்துவ சகாப்த மாற்றத்தைத் தொடங்கி வைத்தது.
- ❖ சுதந்திரத்திற்குப் பிறகு, 1969 ஆம் ஆண்டில் தமிழ்நாடு என மறுபெயரிடப்படும் வரை இந்தப் பகுதி மதராஸ் மாநிலம் என்று அழைக்கப்பட்டது.
- ❖ மதராஸ் நகரம் 1996 ஆம் ஆண்டில் சென்னை என மறுபெயரிடப்பட்டது.
- ❖ மதராஸ் தினத்திற்கான கருத்தாக்கம் 2004 ஆம் ஆண்டில் பத்திரிகையாளர்கள் வின்சென்ட் டிசோசா மற்றும் சஷி நாயர் மற்றும் வரலாற்றாசிரியர் S. முத்தையா ஆகியோரால் முன்மொழியப்பட்டது.

## முதியோர் உதவி மையம்

- சென்னை காவல்துறையானது 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்காக 1252 என்ற உதவி எண்ணுடன் ஒரு முதியோர் உதவி மையத்தை நிறுவியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட "பந்தம்" என்ற சிறப்பு ஆதரவுத் திட்டம், 75 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குடிமக்களுக்கு நேரடி உதவியை வழங்குகிறது.
- இந்த உதவியில் மருத்துவ உதவி, சட்ட உதவி, ஆலோசனை, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் காவல் துறையின் வழிகாட்டுதல் ஆகியவை அடங்கும்.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி, "பந்தம்" மையம் ஆனது 185 சட்ட, 6 மருத்துவ, 5 பாதுகாப்பு மற்றும் 41 அத்தியாவசிய சேவைகள் உட்பட 1,191 வழக்குகளை 72 மணி நேரத்திற்குள் தீர்த்துள்ளது.
- மற்றொரு முன்னெடுப்பான காவல் கரங்கள், இந்த ஆண்டு ஆதரவற்றுக் கைவிடப் பட்ட 646 முதியோர்களை மீட்டதோடு அவர்களில் 117 நபர்களின் முகவரிகள் உடனே கண்டறியப் பட்டு அவர்களது குடும்பத்தினருடன் மீண்டும் இணைக்கப்பட்டனர்.





# தேசியச் செய்திகள்

## பிறப்பு மற்றும் இறப்புகளின் அனைத்துப் பதிவு

- பிறப்பு மற்றும் இறப்புகளின் அனைத்துப் பதிவை அடைவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப் பதிவாளர் ஜெனரல் (RGI) மாநிலங்களைக் கேட்டுக் கொண்டார்.
- உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளைத் தொடர்ந்து, அனைத்து அரசு மருத்துவமனைகளும் பிறப்பு மற்றும் இறப்புகளின் 'பதிவாளர்களாக' அறிவிக்கப்பட்டுள்ளன.
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம், 1969 என்பதின் கீழ் மருத்துவமனைகள் 21 நாட்களுக்குள் நிகழ்வைப் புகாரளிக்க வேண்டும்.
- 2023 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம், 1969, RGI

இணைய தளத்தில் பிறப்பு மற்றும் இறப்புகளை நிகழ்நேரத்தில் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குகிறது.


- முன்னதாக, மாநிலங்கள் தங்கள் சொந்த தரவுத்தளத்தைப் பராமரித்து, மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் RGI அலுவலகத்துடன் புள்ளி விவரங்களைப் பகிர்ந்து கொண்டன.
- RGI உடனான தரவுத் தளத்தை வாக்காளர் பட்டியல்கள், தேசிய மக்கள் தொகை பதிவேடு, ரேஷன் அட்டைகள் மற்றும் சொத்துப் பதிவுகளைப் புதுப்பிக்கப் பயன்படுத்தலாம்.
- அக்டோபர் 1, 2023 முதல், டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ் என்பது கல்வி நிறுவனங்களில் சேர்க்கை, அரசு வேலைகள் மற்றும் திருமணப் பதிவு போன்ற பல்வேறு சேவைகளுக்கான பிறப்புத் தேதியை நிரூபிக்கும் ஒற்றை ஆவணமாகும்.





## செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கீட்டுத் திட்டத்தின் விரிவாக்கம்

- செறிவூட்டப்பட்ட அரிசித் திட்டம் ஆனது 17,082 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் 2028 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- உணவுப் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் அனைத்து ஊட்டங்களுடன் சேர்க்கப்பட்ட அரிசியில் தற்போது இரும்பு, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் B12 ஆகிய ஊட்டங்கள் செறிவூட்டப் பட்டுள்ளது.
- இந்த அரிசி ஆனது TPDS (இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக அமைப்பு), PM POSHAN மற்றும் ICDS (ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைகள்) மூலம் விநியோகிக்கப்படுகிறது.
- PM POSHAN திட்டத்தின் கீழ், செறிவூட்டப்பட்ட அரிசி, உப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவை பள்ளி மாணவர்களில் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை எதிர்த்துப் போராடப் பயன்படுத்தப்படுகின்றன.
- 2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட AMB (இரத்த சோகை அற்ற இந்தியா) முன்னெடுப்பு, இரத்த சோகையைக் குறைப்பதற்காக செறிவூட்டப்பட்ட உணவுகளை வழங்குவதை ஊக்குவிக்கிறது.

- NDDB (தேசியப் பால்வள மேம்பாட்டு வாரியம்) ஆனது 11 மாநிலங்களில் 41,700 குழந்தைகளுக்கு 7.10 லட்சம் லிட்டர் செறிவூட்டப்பட்ட பாலை விநியோகித்துள்ளது.





## அசாமின் கௌஹாத்தியில் IIM




- அசாமின் கௌஹாத்தியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தினை (IIM) நிறுவுவதற்காக, 2025 ஆம் ஆண்டு இந்திய மேலாண்மை நிறுவனங்கள் (திருத்தம்) மசோதாவை பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- மாநிலங்களவையினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த மசோதா 2017 ஆம் ஆண்டு இந்திய மேலாண்மை நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தங்களைச் செய்கிறது.
- கௌஹாத்தியில் நிறுவப்பட உள்ள புதிய IIM 2025-26 ஆம் கல்வியாண்டில் கல்லூரிச் சேர்க்கையைத் தொடங்கும்.
- இந்த மசோதா கௌஹாத்தியில் உள்ள IIM நிறுவனத்திற்கு 555 கோடி ரூபாய் அளவிலான மூலதன நிதியை வழங்குகிறது.

- இதன் மூலம், இந்தியாவில் உள்ள மொத்த IIM நிறுவனங்களின் எண்ணிக்கை 22 ஆக இருக்கும்.

## இராஜீவ் கௌபா தலைமையிலான குழுக்கள்




- மத்திய அரசானது, முழுநேர நிதி ஆயோக் உறுப்பினரும் முன்னாள் அமைச்சரவை செயலாளருமான இராஜீவ் கௌபா தலைமையில் இரண்டு உயர் அதிகார குழுக்களை அமைத்துள்ளது.
- ஒரு குழுவானது விக்ஸித் பாரத் இலக்குகளை அடைவதிலும், மற்றொன்று நிதி சாராத துறையில் ஒழுங்குமுறை சீர்திருத்தங்களிலும் கவனம் செலுத்துகிறது.
- அமைச்சரவைச் செயலாளர் TVS சுவாமிநாதன் தலைமையிலான ஒரு தனிக் குழு, மாநில அளவில் கட்டுப்பாடுகளை நீக்குவதில் பணியாற்றி வருகிறது.
- இக்குழுக்களின் உறுப்பினர்களில் DPIIT, செலவினம், MSME மற்றும் மின்சார அமைச்சகங்களின் செயலாளர்கள், CII, FICCI மற்றும் ASSOCHAM ஆகியவற்றின் இயக்குநர்கள் அடங்குவர்.
- பவன் கோயங்கா, மணீஷ் சபர்வால் மற்றும் ஜன்மேஜய் சின்ஹா போன்ற தொழில்துறைத் தலைவர்களும் இந்தக் குழுக்களின் ஓர் அங்கமாக உள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## Sustainable Power 1404 பயிற்சி





- இஸ்ரேலுடனான 12 நாட்கள் அளவிலானப் போருக்குப் பிறகு ஈரான் தனது முதல் இராணுவப் பயிற்சியை நடத்தியது.
- ஓமன் வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலில் உள்ள கடல் சார் இலக்குகளில்

சீர்வேக எறிகணைகள் ஏவப்பட்டன.

- ❖ முக்கிய கடல்சார் மண்டலங்களில் ஆளில்லா விமானங்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.
- ❖ வான் வழிப் பாதுகாப்பு மற்றும் அணுசக்தித் தளங்கள் மீதான இஸ்ரேலிய தாக்குதல்களுக்குப் பிறகு அதன் வலிமையை வெளிப்படுத்தும் நோக்கில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

## மேற்கு ஆசியாவின் முதல் பஞ்சம்

- ❖ 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று காசாவில் ஏற்பட்ட முதல் பஞ்சத்தை அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட பஞ்சமாக ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா) உறுதிப்படுத்தியுள்ளது.
- ❖ ஐ.நா. சபையின் மதிப்பீடுகளின்படி, காசாவில் சுமார் 500,000 மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டு வருகின்றனர்.
- ❖ ஐ.நா. சபையானது, சரிபார்க்கப்பட்டத் தரவுகளை மேற்கோள் காட்டி மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் (OCHA) இதனை உறுதிப்படுத்தி உள்ளது.
- ❖ ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு கட்டம் சார்ந்த வகைப்பாடு (IPC) ஆனது தினசரிப் பட்டினி காரணமாக 5 வீடுகளில் 1 வீட்டில் உயிரிழப்பும், 3 குழந்தைகளில் 1 குழந்தை ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டதாகவும் பதிவு செய்துள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் பஞ்ச சூழல்கள் டெய்ர் அல்-பலா மற்றும் கான் யூனிஸ் பகுதிகளுக்கு பரவக் கூடும் என்று IPC கணிப்புகள் குறிப்பிடுகின்றன.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சாமோலியில் மேக வெடிப்பு

- ❖ உத்தரக்காண்ட் மாநிலம் சாமோலியில் சமீபத்தில் ஒரு பெரிய மேக வெடிப்பு நிகழ்வு ஏற்பட்டது.
- ❖ கனமழை மற்றும் இடியுடன் கூடிய மழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டது.

- பித்தோராகரில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவுகள் சாலைகளில் போக்குவரத்திற்கு இடையூறை ஏற்படுத்தியுள்ளன என்பதோடு மேலும் ஹர்சில் பகுதியில் உருவாக்கப் பட்ட புதிய ஏரியும் நிரம்பி வருகிறது.
- பர்கோட் தாலுக்காவில் உள்ள சியான்சட்டியில் யமுனை நதியின் ஓட்டம் தடுக்கப் பட்டுள்ளதால் அருகிலுள்ள வீடுகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### NTCA புலிகளின் வழித்தட அங்கீகாரம்




- தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) ஆனது தற்போது வழித்தட அங்கீகாரத்தை முக்கியமாக 2014 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட 32 "குறைந்த செலவு மிக்கப் பாதைகளுக்கு" (LCP) மட்டுப்படுத்தியுள்ளது.
- இந்த LCP பாதைகள் ஆனது முழுமையான, வரைபடங்களாக அல்லாமல் அடிப்படையாகவே கருதப்பட்ட குறைந்த பட்ச நடமாட்டம் தடை செய்யப்பட்டப் பாதைகளை காட்டுவதற்காக இடம்பெயர்வு தூர-செலவு மாதிரியைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டன.
- இந்த மாற்றம் ஆனது லாயிட்ஸ் மெட்டல்ஸ் நிறுவனத்தின் 9.5 சதுர கி.மீ. சுரஜ்கர்

இரும்புத் தாது சுரங்கம் மற்றும் வெஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் நிறுவனத்தின் துர்காபூர் சுரங்கம் உள்ளிட்ட தொழில்துறைத் திட்டங்களுக்கான அனுமதிகளை எளிதாக்கக் கூடும்.

- புலிகளின் வழித்தடங்கள் சுதந்திரமான இயக்கம், மரபணு பரிமாற்றப் பரவல் மற்றும் புலிகளின் வாழ்வை மேம்படுத்துகின்ற, புலி வாழ்விடங்களை இணைக்கும் காடுகள் நிறைந்த பால இணைப்புகளாகும்.
- புதிய கண்டுபிடிப்புகள் ஆனது 30 புலி சரணாலயங்கள் மற்றும் சுமார் 150 பாதுகாக்கப் பட்ட பகுதிகளை (PAs) இணைக்கின்றன என்பதோடு இது உண்மைச் சூழலின் உலக இயக்க சாத்தியக் கூறுகளைப் பிரதிபலிக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## முழு டிஜிட்டல் கல்வியறிவு பெற்ற மாநிலம்




- கேரளா இந்தியாவின் முதல் முழுமையான டிஜிட்டல் கல்வியறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- டிஜிட்டல் திறன்களைக் கொண்டு குடிமக்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட டிஜி கேரளா திட்டத்தின் கீழ் இந்தச் சாதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இரண்டாம் கட்டத்தில் டிஜிலாக்கர் வசதியுடன் இணைக்கப்பட்ட அனைத்து அத்தியாவசிய ஆவணங்களும் எண்ணிம/டிஜிட்டல் மயமாக்கப்படும்.
- இணையவெளிக் குற்றங்களை அடையாளம் காணவும், சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் குடிமக்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.
- மாநிலம் முழுவதும் சுமார் 9,000 அரசு சேவைகள் தற்போது இயங்கலையில் கிடைக்கப் பெறுகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## லார்ட் ஸ்வராஜ் பால் மறைவு

- லார்ட் ஸ்வராஜ் பால் இலண்டனில் காலமானார்.
- 1931 ஆம் ஆண்டில் ஜலந்தரில் பிறந்த பால், 1960 ஆம் ஆண்டுகளில் ஐக்கியப் பேரரசிற்கு குடிபெயர்ந்தார்.
- குழந்தைகள் நலனை ஆதரிப்பதற்காக தனது மகளின் நினைவாக அம்பிகா பால்

அறக்கட்டளையை நிறுவினார்.

- பால் அவர்கள், ஐக்கியப் பேரரசில் கபாரோ குழுமத்தை நிறுவி ஒரு குறிப்பிடத்தக்க வெளிநாடு வாழ் இந்தியத் (NRI) தொழிலதிபரானார்.
- 1978 ஆம் ஆண்டில், ஸ்வராஜ் பவுலுக்கு பிரிட்டிஷ் ராணி நைட்ஹூட் பட்டம் வழங்கினார் என்பதோடு பின்னர் ஐக்கியப் பேரரசின் பிரபுக்கள் சபையின் உறுப்பினரானார்.
- 1983 ஆம் ஆண்டில், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியால் அவருக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.
- 2000 முதல் 2005 ஆம் ஆண்டு வரை, அவர் இந்தோ-பிரிட்டிஷ் வட்டமேசை மாநாட்டிற்கு இணைத் தலைமை தாங்கினார்.
- ஐக்கியப் பேரரசு, அமெரிக்கா, இந்தியா, சுவிட்சர்லாந்து மற்றும் ரஷ்யாவில் உள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து மொத்தம் 15 கௌரவப் பட்டங்களை அவர் பெற்று உள்ளார்.



Lord Swraj Paul of Marylebone - renowned Alumnus
being felicitated by Sh. Chander Mohan, Sh. Alok Sondhi, Sh. Rajinder Mayer and Principal Dr. Naresh Kumar Dhiman

## IESO 2025 - சீனா




- லூதியானாவைச் சேர்ந்த ராயன்ஷ் குப்தா சீனாவின் ஜினிங்கில் நடைபெற்ற 18வது

சர்வதேச புவி அறிவியல் ஒலிம்பியாட் (IESO 2025) போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளி வென்றார்.

- ராயன்ஷ், இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டு தேசியக் கொடியை ஏந்தி அணியை வழி நடத்தினார்.
- இந்த உலகளாவியப் போட்டியில் இந்திய அணி 7 பதக்கங்களையும், 1 சிறப்பு விருதையும் வென்றது.
- ராயன்ஷ், GYM (இளைஞர் மற்றும் ஊடகத்திற்கான புவி அறிவியல்) நிருபர் விருதையும் பெற்றார்.

# விளையாட்டுச் செய்திகள்

## உலக மனித உருவ எந்திரங்களுக்கான விளையாட்டுகள்





- சீன நாடானது, செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபாட்டிக்ஸ் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதற்காக பெய்ஜிங்கில் முதல் உலக மனித உருவ எந்திரம் / ரோபோ விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறது.
- 16 நாடுகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட ஆண்ட்ராய்டு எந்திரங்கள் கால்பந்து, குத்துச்சண்டை மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் போன்ற 26 பிரிவுகளில் போட்டியிட்டன.
- ரோபோக்களின் விரைவான இயக்கம், தொலைநோக்கு மற்றும் தன்னியக்கம் ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கான நேரடிச் சோதனைக் களமாக இந்த நிகழ்வு செயல்பட்டது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய ரோபாட்டிக்ஸ் சந்தை 5 டிரில்லியன் டாலர்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதுடன், சீனா மனித உருவ ரோபாட்டிக்ஸ் துறையில் தலைமைத்துவத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- மோர்கன் ஸ்டான்லி நிறுவனமானது, நூற்றாண்டின் நடுப்பகுதியில் சீனா 300 மில்லியனுக்கும் அதிகமான மனித உருவ எந்திரங்களை இயக்கும் என்று மதிப்பிடுகிறது.
- 1 டிரில்லியன் யுவான் மதிப்புள்ள அரசு நிதி சீனாவின் நீண்டகாலத் தொழில்நுட்பம் மற்றும் ரோபாட்டிக்ஸ் விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்கிறது.


# முக்கிய தினங்கள்

## மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினம் 2025 – ஆகஸ்ட் 22

- சகிப்புத்தன்மை, மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் மற்றும் மதப் பாகுபாட்டில் வேரூன்றிய வன்முறைக்கான பொறுப்புக் கூறலை உறுதி செய்வதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 2019 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையினால் அனுசரிக்கப்பட்டது.
- மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தில் (பிரிவு 18) குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ள படி மதச் சுதந்திரம் அல்லது நம்பிக்கைக்கான உலகளாவிய உரிமையை இந்த அனுசரிப்பு எடுத்துக்காட்டுகிறது.




## அடிமை வர்த்தகம் மற்றும் அதன் ஒழிப்பிற்கான சர்வதேச நினைவு தினம் 2025 - ஆகஸ்ட் 23




- அட்லாண்டிக் கடல் கடந்த (கடல் வழியாக) அடிமை வர்த்தகத்தினால் பாதிக்கப்பட்ட மில்லியன் கணக்கான மக்களை இந்த தினம் நினைவு கூர்கிறது.

- அடிமைத்தனத்தின் வரலாற்று அநீதிகளை ஒப்புக்கொள்வதற்கும் அடிமைப்படுத்தப் பட்ட மக்களின் எதிர்ப்பைக் கொண்டாடுவதற்கும் 1997 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் இந்த நாள் தொடங்கப்பட்டது.
- 1791 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22–23 ஆம் தேதகளில், செயிண்ட் டொமிங்குவில் (இன்றைய ஹைத்தி) அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் ஒரு கிளர்ச்சியைத் தொடங்கினர் என்ற ஒரு நிலையில் இது ஹைத்திய புரட்சியைத் தூண்டியது.
- இந்த எழுச்சி முதல் நவீன கருப்பின குடியரசு உருவாவதற்கு வழி வகுத்ததோடு மேலும் ஒடுக்குமுறைக்கு எதிரான உலகளாவிய எதிர்ப்பின் அடையாளமாக மாறியது.

## இஸ்ரோ தினம் / தேசிய விண்வெளி தினம் 2025 - ஆகஸ்ட் 23

- இஸ்ரோவின் சாதனைகளையும், உலகளாவிய விண்வெளிச் சக்தியாக உருவாகி வரும் இந்தியாவின் எழுச்சியையும் தேசிய விண்வெளி தினம் கௌரவிக்கிறது.
- இந்தத் தேதியானது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்-3 கலத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க மித வேகத்திலான தரையிறக்கத்தைக் குறிக்கிறது.
- இது இந்தியாவை நிலவின் அந்தப் பகுதியை அடைந்த முதல் நாடாக மாற்றுகிறது.
- "Aryabhatta to Gaganyaan: Ancient Wisdom to Infinite Possibilities" என்ற 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு இந்தியாவின் வானியல் பாரம்பரியத்தை அதன் விண்வெளி எதிர்காலத்துடன் இணைக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★